DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 2062/2016

List of Witness : Lw3

Prosecution Witness : PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சரஸ்வதி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | சுப்பிரமணி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 10/07/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் புதுகோட்டையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பவம் நடந்து 11 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் தற்போது என்னால் சரியாக நினைவு கூற முடியவில்லை. ஒரு நாள் கண்ணனும், பாலசுப்பிரமணியனும் சண்டை போட்டுக் கொண்டதாக எனக்கு சொன்னார்கள். வழக்கு சம்பவத்தை குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 25.04.2015 ஆம் தேதி இரவு 8.00 மணிக்கு புதுகோட்டை பிச்சைமுத்து மகன் கண்ணன் என்பவர் எவ்வித காரணமும் இல்லாமல் பாலசுப்பிரமணியன் வீட்டு முன்பு நின்று கொண்டு மிகவும் கெட்டவார்த்தையால் அசிங்கமாக பேசினார் என்றும், அதற்கு பாலசுப்பிரமணியனும் கடையில் இருந்த அவரது மனைவியும் ஒன்றும் சொல்லவில்லை. மேலும் கண்ணன் என்பவர் பேசிய கெட்டவார்த்தைக்கு அளவே இல்லை. பாலசுப்பிரமணியனை பார்த்து உன்னை கொலை செய்யாமல்விடமாட்டேன் என்றும், அந்த வழியாக வந்த சிலர் கண்ணனின் பேச்சை கேட்டு அப்படியே திரும்பி போனாகள் என்றும், மேலும் சிலர் அங்கு பாலத்தில் இருந்தவர்கள் கூட கண்ணனை தட்டிக் கேட்கவில்லை என்றும், பின்பு ரோட்டில் சத்தம் போட்டுக்

கொண்டே கண்ணன் வடக்கு நோக்கி சென்றுவிட்டார் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனக்கு தெரிந்த நபர் என்பதால் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.10 17:42:47 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 10/07/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 2062/2016

List of Witness : Lw9

Prosecution Witness : PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செல்லமுத்து | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பழனியப்பன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 10/07/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சார்பு ஆய்வாளர்கள் பழனிச்சாமி, முத்துலட்சுமி ஆகியோரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். சத்திரப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது கடந்த 28.04.2015 ஆம் தேதி 12.15 மனு எண் 65/2015 ஐ விசாரணை செய்து மனுவின் படி சத்திரப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 113/2015 பிரிவுகள் 294(பி), 506(1) இதச ஆக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார்தாரரின் புகாரையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்பந்தமப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். **புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு அன்றைய தினமே 12.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகேசன், மணி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.ச.வின் கீழ் வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.** பின்பு சாட்சிகள் பாலசுப்பிரமணி, கனகலட்சுமி, சரஸ்வதி, தேவி ஆகியோரை தனித் தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.ச.வின் கீழ் வாக்கு மூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்பு எதிரியை தேடிவந்த நிலையில் தகவலின் பேரில் சத்திரப்பட்டி டாக்டர். தங்கவேல், செல்வி கொங்கு மஹால் அருகே இருந்த எதரியை கடந்த 28.04.2015 ஆம் தேதி அன்று 13.15 மணிக்கு காரணம் கூறி கைது

செய்தும் பாரா வசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். பின்பு சார்பு ஆய்வாளர் எஸ்.முத்துலட்சுமி அவர்கள் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு எதிரி மீது 30.04.2015 ஆம் தேதி இதச பிரிவுகள் 294(பி), 506(1) ஆக குற்ற இறுதியறிக்கை தயார் செய்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஒட்டன்சத்திரத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கை நான் நேரடியாக புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சிகளை எங்கு வைத்து எப்போது நேடியாக விசாரணை செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி சொன்ன விதத்தில் சொன்ன மாதிரி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமலேயே காவல் நிலையத்தில் வைத்து வழக்கின் தோதுக்கு ஏற்ப பார்வை மகஜர் வரைபடம் ஆகிய ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் உண்மைக்கு மாறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.10 17:42:53 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 10/07/2026